

Dear Devotees,

The 3rd Maha Kumbhabishegam or Consecration Ceremony of the 120-year old Darma Muneeswaran Temple and its Deities will be held on Friday, 1 May 2026 (Labour Day) from 9.30 am to 10.30 am. Devotees are cordially invited to participate in the preceding ceremonies and poojas, witness the Maha Kumbhabishegam and be showered with the divine blessings of Lord Darma Muneeswaran on this auspicious and memorable occasion. Devotees are also requested to witness the Maha Abishegam for Lord Darma Muneeswaran and Sri Mariamman at 5.30 pm on the same day.


*Yenthira Poojai - 8 March (Sunday) to 21 April 2026 (45 days)*
*8.30 am & 5.30 pm, Single session - $501*

The Yenthira Japam and Poojai commenced on 8 March 2026. It is held daily between 8.30 am and 11.30 am, and between 5.30 pm and 8.30 pm. After 45 days of intense prayers to spiritually charge the Yenthirams, they will be placed in each granite dais before the deities are mounted.

*108 Kubera Lakshmi Poojai - 24 April 2026 (Friday)*
*6.45 pm -$151*

The special 108 Kubera Lakshmi Poojai performed to bestow wealth on devotees and the country will be performed on 24 April 2026 at 7.00 pm. Devotees will receive Sowbagya Prasadam, blessed during the poojai.

*Yagasalai Poojai - 27 April (Monday) to 01 May 2026 (Friday)*
*8.30 am - 11.00 am & 6.30 pm - 8.00 pm*



Following the placing of the main Kumbams at the Yaagasalai, the Yagasalaai poojai will start on 27 April 2026 at 7.00 pm. There will be 8 Yagasalai sessions for devotees to participate in. The concluding session on 01 May 2026 starts at 5.00 am.

*Yagasalai Poojai - 27 April (Monday)*
*to 30 April 2026 (Thursday)*
*Poornahuthi Plate Samarpanam - $11*

We have made arrangements for devotees to take part in the Yagasalai poornahuthi during each session (Kaalam). The poornahuthi plate samarpanam during these days will be held from 8.30 am to 11.00 am and 5.30 pm to 8.00 pm.

*Placing Gold, Silver and Gem stones in the Dais of the Sanctums*
*28 April 2026 (Tuesday) 6.00 am to 6.00 pm*

Yenthrasthaapanam is the placing of the specially blessed Yenthrams in the sanctum dais following 45 days of intensive japam and poojais. After the Yenthrasthaapanam, devotees can place gold, silver and gem stones in the dais of the deities from 6.00 am till 6.00 pm.



*Oil Anoinment Ceremony - 29 April 2026 (Wednesday)*
*9.30 am to 7.30 pm*

Yennai Saatruthal or oil anointment ceremony is a rare opportunity accorded to devotees during the Maha Kumbabishegam period. Please be punctual as there are several other ceremonies to be performed after the oil anointment ceremony.

*Maha Kumbabishegam - 01 May 20256 (Friday)*
*9.30am to 10.30 am*

The Maha Kumbabishegam (Consecration Ceremony) will be held on Friday, 01 May 2026 ( Labour Day) between 9.30 am and 10.30 am.

*Mandalabishegam 02 May 2026 (Saturday) to 18 June 2026 (Thursday)*
*4.00 pm*

Following the Maha Kumbabishegam, 48 days of Mandalabishegam prayers will be held starting from 02 May 2026. Special Abishegams and Poojai will be conducted daily from 4.00 pm to 7.30 pm. During these 48 days, Cultural Programmes will be held from 7.00 pm. Popular local artists will be presenting these programmes.



**SPECIAL ARRANGEMENTS AND OTHER INFORMATION ON THE DAY OF MAHA KUMBABISHEGAM (01 May 2026)**

❖ *Viewing Points*

Part of Serangoon North Ave 1 will be closed to form the viewing area for devotees and to facilitate their smooth and safe movement in and out of the Temple. Entrances to the viewing area are located at Gates A and B (only for Guests with invitation cards) as shown in the location map. All devotees are requested to come early and follow the instructions provided by our volunteers at the respective locations.

❖ *Livestream*

Devotees can watch the livestream of the preceding events and the Maha Kumbabishegam at :

https://www.youtube.com/

❖ *Entry into the Temple*

Devotees will be allowed to enter the Temple through the main entrance after the Kumbabishegam ceremony. Volunteers will guide devotees on the movement into and out of the Temple.

❖ *Footwear*

Footwear is not to be worn in the Temple. Plastic bags will be provided for devotees to keep their footwear.

❖ *Annathanam*

Annathaanam will be served at the open carpark located adjacent to the Temple from 9.30 am onwards. Please follow the directional signs and the guidance of our volunteers.

❖ *Road Closure*

Serangoon North Ave 1 will be closed to vehicles on 01 May 2026 from 12.00 am to 2.00 pm.

❖ *Car Park*

Devotees are advised to take public transport. Parking in the HDB carparks in the vicinity of the Temple are prioritised for residents.

❖ *MRT and Bus Services*


- The nearest MRT Stations are Ang Mo Kio (NS16) and Serangoon (NE12/CC13). From Ang Mo Kio MRT Station or Ang Mo Kio Interchange, devotees may board Services 25, 73, 74,76,132 or 165 and alight at bus stop near Blk 554 (opposite Lychee Francais De Singapour). Thereafter, cross the road to Blk 101 via overhead bridge. The Temple is a short walk from there.
- From Serangoon MRT Station or Serangoon Interchange, devotees may board Service 315 and alight at Blk 112 along Serangoon Ave. The Temple is a short walk from there.

**For more information kindly contact the Temple at**
**Tel: 62805058**

**MAHA KUMBABISHEGAM PROGRAMME**
**01.05.2026, Friday**

| | |
|---|---|
| 4.30 am | Vigneswara Poojai, Punyaahavasanam |
| 5.00 am | 8th Session Yaaga Poojai |
| 6.00 am | Bimbasuthi, Rakshabanthanam, Sparsaahuthi,Thiraviyahuthi |
| 7.30 am | Maha Poornahuthi, Deeparathanai, Yaatrathanam |
| 8.15 am | Gadam Procession |
| 9.30 am | Maha Kumbaishegam for Pinnacles |
| 10.00 am | Maha Kumbabishegam for Deities<br>Maha Deeparathanai |
| 10.00 am | Temple Varisai, Devotee Darisanam |
| 5.30 pm | Maha Abishegam for Lord Muneeswaran & Sri Mariamman<br>Maha Deeparathanai |

# தரும முனீஸ்வரன் ஆலயம்
# Darma Muneeswaran Temple



## மஹா கும்பாபிஷேகம்
## MAHA KUMBABISHEGAM
## Friday
## 01 May 2026

DMT Events Brochure 2026 final.indd 1 3/7/2026 9:40:03 AM



பேரன்புடையீர்!

நமது சிங்கப்பூர் திருநாட்டில் சிரங்கூன் நார்த் பகுதியில் எழுந்தருளி வேண்டுவோருக்கு வேண்டிய வரங்களை வாரி வழங்கும் 100 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த ஸ்ரீ தரும முனீஸ்வரர் ஆலயம் புதிய தோரணவாயில், வசந்த மண்டபம் மற்றும் திருகோயில் திருப்பணி வேலைகள் நடைபெற்று மஹா கும்பாபிஷேக விழா காணவுள்ளது. நிகழும் மங்களகரமான பராபவ வருடம் சித்திரை மாதம் 18-ம் (தேதி 01.05.2026) வெள்ளிக்கிழமை பௌர்ணமி திதியும் சுவாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் மிதுன லக்கனத்தில் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. பக்தகோடி பெருமக்கள், இறையன்பர்கள், உபயதாரர்கள் மற்றும் சிங்கப்பூர் வாழ் பொதுமக்கள் அனைவரும் திரளாக வந்து கும்பாபிஷேக விழாவை தரிசனம் செய்து ஸ்ரீ தரும முனீஸ்வரர் மற்றும் ஸ்ரீ மாரியம்மன் அருளைப் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

**யந்திர பூஜை - 8 மார்ச் முதல் 21 ஏப்ரல் 2026 வரை (45 நாட்கள்)**
**காலை 8.30 மணி மற்றும் மாலை 5.30 மணி**
**ஒரு காலம் - $501**

யந்திர பூஜை, 8 மார்ச் (ஞாயிறு) தொடங்கியது. 21 ஏப்ரல் 2026 (செவ்வாய்) வரை 45 நாட்களுக்கு யந்திர ஜபம் மற்றும் பூஜைகள் நடைபெறும். சடங்குகள் காலை 8.30 மணி மற்றும் மாலை 5.30 மணிக்கு நடைபெறும். ஒவ்வொரு யந்திரத்திலும் ஒவ்வொரு தெய்வத்தின் மூல மந்திரம் பொறிக்கப்பட்டிருக்கும். யந்திரங்கள் தெய்வச் சன்னதியில் உள்ள கருங்கல் மேடைக் குழியில், தெய்வச்சிலை பதிய வைக்கப்படுவதற்கு முன் வைக்கப்படும்.

**குபேரலக்ஷ்மி பூஜை - 24 ஏப்ரல் 2026 (வெள்ளி)**
**இரவு 6.45 மணி -$151**



இந்த குபேரலக்ஷ்மி பூஜை பக்தர்களுக்கும் நாட்டுக்கும் செல்வ செழிப்பை அளிக்கவல்லது. இதில் பங்கேற்கும் பக்தர்களுக்கு ஆசீர்வதிக்கப்பட்ட குத்துவிளக்கும், சௌபாக்ய பிரசாதமும் வழங்கப்படும்.

**யாகசாலை பூஜை**
**27 ஏப்ரல் (திங்கள்) முதல் 01 மே 2026 (வெள்ளி) வரை**
**காலை 8.30 மணி - 11.00 மணி மற்றும் மாலை 5.30 மணி - 8.30 மணி**

மஹா கும்பாபிஷேகத்துக்கான யாகசாலை பூஜை 27 ஏப்ரல் (திங்கள்) இரவு 7 மணிக்குத் தொடங்கும். கடைசி காலம் 01 மே 2026 (வெள்ளி) காலை 5.00 மணிக்குத் தொடங்கும். யாகசாலை பூஜையில் கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஆலயத்தை அனுகவும்.

**யாகசாலை பூர்ணாஹுதி சமர்பணம்**
**27 ஏப்ரல் (திங்கள்) முதல் 30 ஏப்ரல் 2026 (வியாழன்) வரை**
**பூர்ணாஹுதி தட்டு - $11**

மஹா கும்பாபிஷேகத்துக்கான யாகசாலை பூஜையில் பக்தர்கள் பங்கேற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பக்தர்கள் $11 செலுத்தி கோவிலில் தயாரித்து வழங்கப்படும் பூர்ணாஹுதி தட்டை யாகத்தில் சமர்பிக்களாம்.

**பீடங்களில் தங்கம், வெள்ளி, நவரத்தின கற்களை வைத்தல்**
**28 ஏப்ரல் 2026 (செவ்வாய்) காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**

யந்திரஸ்தாபன தினத்தன்று தங்கம், வெள்ளி மற்றும் நவரத்தின கற்களை சன்னதி மேடைக் குழியில் பக்தர்கள் தங்கள் காணிக்கையாக காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை வைக்கலாம். இந்தச் சடங்கில் பங்கேற்க விரும்பும் பக்தர்கள் கோவிலுக்கு நேரத்தோடு வருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**தெய்வச் சிலைகளுக்கு எண்ணெய் வைத்தல்**
**29 ஏப்ரல் 2026 (புதன்) காலை 9.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை**

மகா கும்பாபிஷேகத்துக்கு முன் தெய்வச் சிலைகளுக்கு எண்ணெய் சாற்றுதல் பக்தர்களுக்கு வழங்கப்படும் ஓர் அரிய வாய்ப்பு. இச்சடங்கில் பங்கேற்க விரும்பும் பக்தர்கள் கோவிலுக்கு நேரத்தோடு வருமாறு கேட்டுக் கொள்கிறோம். இச்சடங்குக்குப் பிறகு மேலும் பல சமய சடங்குகள் நடைபெறுவதால் இந்த வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.



**மஹா கும்பாபிஷேகம் - 01 மே 2026 (வெள்ளி)**
**காலை 9.30 மணி - காலை 10.30 மணி**

ஸ்ரீ தரும முனீஸ்வரர் ஆலயம் பராபவ வருடம் சித்திரை மாதம் 18-ம் (தேதி 01.05.2026) வெள்ளிக்கிழமை பௌர்ணமி திதியும் சுவாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் மிதுன லக்னத்தில் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் காணவுள்ளது.

**மண்டலாபிஷேகம் - 02 மே (சனி) முதல் 18 ஜூன் 2026 (வியாழன்) வரை**

மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, மண்டலாபிஷேக பூஜைகள் 02 மே (சனி) முதல் 18 ஜூன் 2026 (வியாழன்) வரை 48 நாட்களுக்கு மாலை 4.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெறும். இரவு 7.00 மணியிலிருந்து பிரபல உள்ளூர் கலைஞர்கள் நிகழ்ச்சிகள் படைப்பார்கள்.



## மஹா கும்பாபிஷேகம் நாள் (வெள்ளி, 01 மே 2026) சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் தகவல்கள்

### ❖ பார்வையாளர் இடங்கள்

சிராங்கூன் நார்த் அவென்யூ 1 சாலையின் ஒரு பகுதி கும்பாபிஷேகத்திற்காக மூடப்படும். இது பக்தர்கள் கோவிலுக்கு உள்ளேயும் வெளியேயும் பாதுகாப்பாகவும் சீராகவும் செல்ல வழிவிடும். பார்வையிடும் பகுதிக்கான நுழைவு வாயில்கள் Gate A மற்றும் B (அழைப்பிதழ் பெற்ற விருந்தினர்களுக்கு) என பிரிக்கப்பட்டுள்ளன. இவை கோவில் அமைந்த வரைபடத்தில் காணலாம். அனைத்து பக்தர்களும் முன்கூட்டியே வருகை புரிந்து எங்கள் தொண்டர்களின் வழிகாட்டுதலை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### ❖ நேரலை

மஹா கும்பாபிஷேக விழாவைப் பக்தர்கள் நேரலையாகக் காண சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதை பக்தர்கள் இந்த சமூக தளத்தில் காணலாம்.

https://www.youtube.com/

### ❖ ஆலயத்துக்குள் செல்லுதல்

கும்பாபிஷேக நிகழ்ச்சி முடிந்த பிறகு, கோவிலுக்குப் பக்தர்கக் நுழைய அனுமதி வழங்கப்படும். பக்தர்கனை வழி காட்ட எங்கள் தொண்டூழியர்கள் உதவுவார்கள்.

### ❖ பாதணிகள்

கோவிலுக்குள் காலணிகள் அணிந்து செல்லக்கூடாது. பக்தர்கள் தங்களின் காலணிகளை வைத்துக் கொள்ள பைகள் வழங்கப்படும்.

### ❖ அன்னதானம்

மஹா கும்பாபிஷேக அன்னதானம் ஆலயதிற்கு பக்கத்தில் உள்ள கூடத்தில் காலை 9.30 மணி முதல் வழங்கப்படும். ஆங்காங்கே உள்ள வழிகாட்டிகளை பின்பற்றி அன்னதான இடத்திற்கு செல்லலாம்.

### ❖ சாலை மூடல்

சிராங்கூன் நோர்த் அவென்யூ 1 சாலையின் ஒரு பகுதி வாகனங்களுக்கு 01 மே 2026 அதிகாலை 12.00 முதல் மதியம் 2.00 மணி வரை மூடப்படும்.

### ❖ வாகனம் நிறுத்தும் இடம்

சிராங்கூன் நார்த் அவென்யூ 1ல் சில கார் நிறுத்தும் இடங்களே இருப்பதால் பக்தர்கள் பொது போக்குவரத்து சேவைகளை பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

### ❖ ரயில் நிலையம் மற்றும் பேருந்து சேவை


அருகில் இருக்கும் ரயில் நிலையங்கள்
(அ) அங் மோ கியோ MRT
(ஆ) சிராங்கூன் MRT

அங் மோ கியோ MRT மற்றும் அங் மோ கியோ பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து எண்கள் 25, 73, 74, 76, 132 மற்றும் 165யில் ஏறி பிளோக் 554 பேருந்து நிறுத்தத்தில் இறங்கி, அங்கிருந்து பிளோக் 110க்கு மேம் பாளத்தின் வழி சென்று அருகிலிருக்கும் ஆலயத்தை அடையலாம்.
சிராங்கூன் MRT மற்றும் சிராங்கூன பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து எண் 315ல், ஏறி சிராங்கூன நார்த் ஆவயு 1ல் உள்ள பிளோக் 112 பேருந்து நிறுத்தத்தில் இறங்கி, அருகிலிருக்கும் ஆலயத்தை அடையலாம்.

**மஹா கும்பாபிஷேக பூஜைகள் பற்றிய மேல் விவரங்களுக்கு, 62805058 என்ற எண்களில் கோவில் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.**

### மஹா கும்பாபிஷேகம் நிகழ்ச்சிகள்
### 01.05.2026, வெள்ளி

| | |
|---|---|
| காலை 4.30 மணி | விக்னேஸ்வர பூஜை, புண்யாகவாசனம் |
| காலை 5.00 மணி | எட்டாம் கால யாக பூஜை |
| காலை 6.00 மணி | பிம்பசுத்தி, ரக்ஷபந்தனம் |
| காலை 6.00 மணி | தத்வார்ச்சனை ஸ்பர்சாஹுதி |
| காலை 7.30 மணி | திரவ்யாஹுதி |
| காலை 7.45 மணி | மஹா பூர்ணாஹுதி, மஹா தீபாராதனை, யாத்ராதானம் |
| காலை 8.15 மணி | கடம்புறப்பாடு |
| காலை 9.30 மணி | அனைத்து விமானங்கள் மற்றும் இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் |
| காலை 10.00 மணி | மூலஸ்தான மஹா கும்பாபிஷேகம் மஹா தீபாராதனை |
| காலை 10.00 மணி | கோயில்கள் வருகை, பக்தர்கள் தரிசனம் |
| மாலை 5.30 மணி | மஹா அபிஷேகம், மஹா தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் |




Bus Stop

